# சம்மதமே இறைவா  சம்மதமே தலைவா-உன்

சம்மதமே இறைவா  சம்மதமே தலைவா-உன்
மாலையிலே ஒரு மலராகவும்
பாலையிலே சிறு மணலாகவும்
வாழ்ந்திட சம்மதமே இறைவா
மாறிட சம்மதமே ( 2 )

**1**
தயங்கும் மனதுடைய
நான் உனக்காகவே - உன்
பணிக்காகவே வாழ்ந்திட வரம் தருவாய்( 2 )
கருவாக எனைப் படைத்து - உயர்
கண்மணியாய் எனை வளர்த்து ( 2 )
கரமதிலே உருப் பதித்து
கருத்துடனே என்னை காக்கின்றாய்

**2**
மலையாய் நான் கணித்த
பெரும் காரியமும் உயர் காவியமும்
மறைந்தே போனது ( 2 )
திருவாக உனை நினைத்து - உயர்
உறவாகவே நெஞ்சில் பதித்து ( 2 )
உன் பெயரைச் சாற்றிடவே
நலம் தரவே என்னை அழைக்கின்றாய்